[1981 மார்ச் 23

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, ஊழல் நடந்ததா இல்லையா என்பதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் தனியாக விசாரித்துப் பதில் சொல்ல முடியும்.

தீ விபத்தில் வீடிழந்தவர்களுக்கு அரசு உதவி.

*வினா எண். 435 : திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீ விபத்தில் வீடு இழந்தவர்களுக்கு அரசு அளிக்கும் உதவிகள் 10 ரூபாய்க்கு மேல் கிஸ்தி செலுத்துபவர்களுக்கு இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அவ்விதியைத் திருத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே தீயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் நிலவரி செலுத்துவது ரூபாய் பத்தும் அதற்கும் குறைவாக இருந்தால் அரசு எல்லாவிதமான உதவிகளையும் செய்கிறது. சிலயிடங்களில் பத்து ரூபாய்க்கும் அதிகமாக இருந்தாலும் அங்கேயிருக்கின்ற நிலைமைக்கேற்றவாறு இடத்திற்கேற்றவாறு நஷ்டத்திற்கேற்றவாறு அந்த விதியைத் தளர்த்தி அவர்களுக்கு உதவி செய்வதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 'கேர்' நிறுவன உதவியுடன் சுகாதார கல்வித்திட்டம்

* வினா எண். 436 : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தில் கேர் நிறுவன உதவியுடன் சுகாதார கல்வித்திட்டம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதற்கான திட்டத்துக்கு 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27 ஆம் நாள் அன்று ஏற்பளிக்கப்பட்டு அது இப்பொழுது செயல்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சுகாதாரக் கல்வித் திட்டத்தின் நோக்கம் என்ன ? இந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா ? கேர் நிறுவனம், மத்திய அரசு, மாநில அரசு ஆகியவை மூலம் இந்தத் திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ஒதுக்கப்படும் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டமானது ஆசிரியர்களுக்கு, நோய்கள் பற்றிய, சுகாதாரம் பற்றிய பயிற்சி அளிக்கின்ற திட்டம். அதை அவர்கள் மாணவர்களுக்குச் சொல்லித் தர வேண்டும். தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு, சாதாரண நோய்கள் வருவதற்கு என்ன காரணம் என்பதைச் சொல்லி அதை வராமல் தடுக்கவும், அப்படி வந்தால் என்னென்ன செய்ய வேண்டும் என்பதற்கான ஒரு அடிப்படை அறிவை, சுகாதாரம் பற்றிய அறிவைத் தருவதற்கு இது சிறப்புத் திட்டமாக ஏற்பளிக்கப்பட்டிருக்கிறது. கேர் நிறுவன உதவியோடு இதை நாம் நடத்துகிறோம். செலவு 4 இலட்சம் ரூபாயாகிறது. அதில் 1,50,000 ரூபாயை கேர் நிறுவனம் ஏற்றிருக்கிறது. இந்தத் திட்டம்—திருநெல்வேலி மாவட்டத்தில் நாம் நடத்தி வருகின்ற திட்டம் வெற்றி கண்டால், இந்தத்திட்டம் நல்ல திட்டம் என்பது நம்முடைய அனுபவத்திலே தெரிய வருமேயானால் மற்ற உதவிகளையும் கணக்கிற்கொண்டு பிற மாவட்டங்களுக்கும் இதை விஸ்தரிக்கலாம் என்று இருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, சுகாதாரத் கல்வித் திட்டம் செவ்வனே செயல்படும் முறையில், வெளிநாடுகள் சுகாதாரக் கல்வித் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருவதால் மாணவர்களையும், மாணவிகளையும் கல்விச் சுற்றுலா மூலம் கேர் நிறுவன உதவியுடன் வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, சுகாதாரம் பற்றிய அறிவைப் பெறுவது என்கின்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம். அதை ஒரு பிரச்சினையாகக் கருதி, நாமே எடுத்து அந்த அறிவைத் தருவதற்காக இந்தத் திட்டத்தை நாம் செயல்

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

படுத்திக் கொண்டிருக்கிற நேரத்தில் மாணவர்களை அங்கே, அனுப்புவது என்றால் அது புதுப் பிரச்னைகளை உருவாக்கும். ஆகவே, அத்தகைய செலவை மேற்கொள்ள முடியாது. அத்தகைய நிலைமைக்குப் போக வேண்டியதும் இல்லை. நமக்கு இருக்கின்ற பல துறை அறிவையும் மாணவர்களுக்குச் சொல்லித் தருவது, அவர்களுக்குப் பயன்படும் அளவிற்குச் சொல்லித்தருவது கல்வியின் ஒரு பாகம் என்ற முறையிலே கல்வி இருப்பதால் இதைச் செய்கிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் கேர் நிறுவன உதவியுடன் சுகாதாரக் கல்வித் திட்டம் எல்லாப் பள்ளிகளிலும் நடத்தப்படுகிறதா? இல்லையென்றால் எல்லாப் பள்ளிகளிலும் நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கின்ற 2,600 தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் எல்லா ஆசிரியர்களுக்கும் பயிற்சி தரும் திட்டம் இந்தத் திட்டம். ஆகவே, எல்லாத் தொடக்கப் பள்ளிகளுக்கும் வரும்.

தொடக்கப்பள்ளிகளில் கூடுதல் ஆசிரியர்கள் நியமித்தல்.

*வினா எண். 437—திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக தொடக்கப்பள்ளிகளில் பத்து ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளில் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமித்திட 10+1 என்று ஆணையிட அரசுக்கு எண்ணம் உண்டா?

(ஆ) ஆம், எனில் எந்த ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆண்டுதோறும் ஓரளவுக்கே புதியதாக கூடுதல் ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்திட நிதி நிலை இடம் தருகிறது. எனவே, அவ்வாறு ஏற்படுத்தும் புதிய கூடுதல் பதவிகளை பகிர்ந்தளிக்கையில் 10+1 அடிப்படையில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் ஆசிரியர் பதவித் தேவை கணக்கில் எடுக்கப்படுவது இல்லை. தற்போதைக்கு இந்நிலையில் மாற்றம் செய்ய இயலாது. (ஆயினும், 10-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஏற்கெனவே பணியாற்றி வரும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்றி வரலாம் என்று கணக்கிடும் பொழுது 10+1 அடிப்படையில் தேவைப்படும் பதவியும் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது.